வட்டாட்சியர் அலுவலகம்
01 MAR
திருப்பெரும்புதூர்

காஞ்சிபுரம் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் செயல்முறைகள்

பிறப்பிப்பவர்.- இரா.பன்னீர்செல்வம், எம்.ஏ., பி.எட்.,

ந.க.14476/2016/அ4

நாள்.-11.02.2022

பொருள்.- கருணை அடிப்படையில் பணி நியமனம் - காஞ்சிபுரம் மாவட்டம் - திருப்பெரும்புதூர் வட்டம் - பிள்ளைபாக்கம் பி கிராம நிர்வாக அலுவலராகப் பணிபுரிந்து கடந்த 2.12.2012-ல் அன்று பணியிடையே காலமான திரு.வி.தனக்கோட்டி என்பவரது மகன் திரு.த.பாலமுருகன் - என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை வருவாய் ஆய்வாளர் பணி நியமனம் வழங்கியது - தனியரை இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் 18.05.2018 முற்பகல் பணிவரன்முறை செய்து உத்திரவிடல் - தொடர்பாக.

பார்வை.-
1. காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறைகள் ந.க.14476/2016/அ4/நாள்.-04.05.2018
2. அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள்.-26.02.2021
3. கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையர், சேப்பாக்கம் சென்னை - 5 அவர்களின் கடித எண்.ஆ.கு,3/18395/2020/நாள்.-06.08.2021

((((()))))

ஆணை.-

காஞ்சிபுரம் மாவட்ட வருவாய் அலகில், காஞ்சிபுரம் கோட்டம் மற்றும் திருப்பெரும்புதூர் வட்டம், வட்டாட்சியர் அலுவலகத்தில் கடந்த 22.12.2012 அன்று பணியிடையே காலமான திரு.வி.தனக்கோட்டி என்பவரது மகன் திரு.த.பாலமுருகன் என்பவருக்கு கருணை அடிப்படையில் பார்வை 1-ல் காணும் செயல்முறைகளின் படி, திருப்பெரும்புதூர் வட்டத்தில் இளநிலை வருவாய் ஆய்வாளராகப் பணியிடம் வழங்கப்பட்டது. தனியர் 18.05.2018 முற்பகல் முதல் இளநிலை வருவாய் ஆய்வாளராகப் பணிபுரிந்து வருகிறார்.

2.பார்வை 2 -ல் காணும் அரசாணை மற்றும் பார்வை 3-ல் காணும் வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் கடிதத்தில், 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு எந்த வித விதித்தளர்வும் தேவைப்படாத பணியாளர்களுக்கு இளநிலை உதவியாளர் / தட்டச்சர்களுக்கு பணி நியமன அலுவலர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) (Appointing Authority) என்ற நிலையில், ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர் மாவட்ட வருவாய் அலுவலர் (அ) மாவட்ட ஆட்சியர் பணி நியமன அலுவலராக இருக்கும் பட்சத்தில் ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர் என்ற நிலையில் கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக

ஆணையர் அவர்கள் அவரவர் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட அரசு பணியாளரின் பணியினை வரன்முறை செய்யலாம் என்றும், பணிவரன்முறை செய்யும் பொருட்டு பணிவரன்முறை செய்யப்பட வேண்டியவர்கள் (விதித்தளர்வு நீங்கலாக) தனியர்களின் அசல் சான்றிதழ்கள் /ஆவணங்கள் திரும்ப வரப்பெற்றது.

3.இந்நேர்வில் காஞ்சிபுரம் மாவட்ட வருவாய் அலகில், கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கப்பட்டு, திருப்பெரும்புதூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் இளநிலை வருவாய் ஆய்வாளராகப் பணிபுரிந்து வரும் திரு.த.பாலமுருகன் என்பவர் பணியில் சேர்ந்த நாளான 18.05.2018 முற்பகல் முதல் இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் பணிவரன்முறை செய்து உத்திரவிடப்படுகிறது.

ஒம்/-இரா.பன்னீர்செல்வம்
மாவட்ட வருவாய் அலுவலர்,
காஞ்சிபுரம்.

// உத்திரவின் படி //

மாவட்ட வருவாய் அலுவலருக்காக

பெறுநர்
திரு.த.பாலமுருகன்
இளநிலை வருவாய் ஆய்வாளர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
திருப்பெரும்புதூர் (குடிமைப் பொருள்)
காஞ்சிபுரம் மாவட்டம்.

நகல்.-

1. வட்டாட்சியர் - திருப்பெரும்புதூர்.
...................................தனியரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொண்டு அறிக்கை அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

2. முதன்மைச் செயலாளர் /
வருவாய் நிருவாகம் மற்றும்
பேரிடர் மேலாண்மை ஆணையர்,
வருவாய் நிருவாக ஆணையரகம்,
சேப்பாக்கம் சென்னை - 5 .........அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

3. அலுவலக மேலாளர் (பொது) / அ4 இருக்கை